## GOSPEL JOURNEY CHENNAI DECEMBER 2015



R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Posted at Batlagundu Post office on 10th Feb 2016

*Our Radio & TV Programs*
Sri Lanka Radio SW 25,41 Meter
on Saturday 5.30P.M &Tamilan TV
on Monday &
Saturday 7.30 P.M

**To**

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

Postman Remarks (If Undelivered):
- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 16 | பிப்ரவரி 2016 | கனி 3




**Eagle**



**THE WORD OF CHRIST**

"கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக" – கொலோசெயர் 3:16

ஆசிரியர்
B. அர்ஜுனன்



# World Evangelism Gospel Media



**Arjunan in Tamil on Tamilan TV & Radio:**
TV:Every Monday 7.30-7.45 p.m and Every Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 25 and 45 meter band of Sri Lanka Radio.
*(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi on TV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Puthuyugam TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Tuesday 6.15-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 25 and 45 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile: 09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*


## THE WORD OF CHRIST
Monthly Magazine

**Editor**
**B.ARJUNAN**

**Associate Editor**
**K.R.K.Ravi Asir**


அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்தியில் பேசுகிறோம் - 2கொரி.2:17

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
### மாத இதழின் உள்ளே...


ஆசிரியருரை
ஜெ.சி.சோட்,
பெட்டி சோட் அவர்களின் செய்தி
ஜெர்ரிபேட்ஸ், பவுலா பேட்ஸ்
அவர்களின் செய்தி மற்றும்
வேதபாடம்,
வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி
மற்றும் பல...


"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




# வேத அறிவுப் போட்டி எண்: 186

## போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் 25-ம் தேதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை மே மாத இதழில்!

1. தன் பாலிய வயதின் புருஷனுக்காக இரட்டுடுத்தியிருக்கிற பெண்ணைப் போலப் புலம்பு என்று எந்த தீர்க்க தரிசியைக்கொண்டு கர்த்தர் உரைத்தார்?
2. உன் சூனியத்தால் எல்லா ஜாதிகளும் மோசம்போனார்களே என்று எந்த நகரத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது?
3. நாங்கள் எங்கள் பலத்தினாலே எங்களுக்குக் கொம்புகளை உண்டாக்கிக் கொள்ளவில்லையோ என்று சொல்லி, வீண் காரியத்தில் மகிழுகிறார்கள் என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் உரைத்தார்?
4. பிரதான ஆசாரியரும், மூப்பரும் எவனைப் பார்த்து: எங்களுக்கென்ன, அது உன்பாடு என்றார்கள்?
5. எந்த நகரத்தின் ராஜா தேவ மனிதனின் செய்தி தனக்கு எட்டினபோது இரட்டை உடுத்திக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான்?
6. எவனுடைய வார்த்தையைக் கேட்டு, சந்தோஷப்பட்டு அவனுக்குப் பணங்கொடுப்போம் என்று வாக்குத்தத்தம் பண்ணினார்கள்?
7. என் அக்கிரமத்தைப் போக்க என் முதற் பேறானவனையும், என் ஆத்துமாவின் பாவத்தைப்போக்க என் கர்ப்பக்கனியையும் கொடுக்கவேண்டுமோ? என்று எந்த தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் வழக்காடினார் ?
8. இஸ்ரவேலுக்குத் தன்னைக் காண்பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களிலே இருந்தவன் யார்?
9. கர்த்தருக்கு விரோதமாகப் பொல்லாத நினைவுகொண்டிருக்கிற துராலோசனைக்காரன் ஒருவன் எவ்விடத்திலிருந்து புறப்பட்டான் என தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் உரைத்தார்?
10. இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது என்றவர்கள் யார்?

**போட்டியாளர்கள் கவனிக்க...**

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை 100 பேருக்கு அறிமுகம் செய்து முகவரிகளை சேகரித்து ஆங்கிலத்தில் தெளிவாக மாவட்டம் மற்றும் பின்கோடு உடன் அனுப்பி வைப்பவர்களுக்கு ஒரு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும்.

**இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்** 4

நாள்: பிப்ரவரி 20-ம் தேதி, சனிக்கிழமை
நேரம்: காலை 10 மணிமுதல் மாலை 7.30 மணி வரை
கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம்
ஹைஸ்கூல் மேடு, வேலாயுதம்பாளையம்
மண்மங்களம் (T.K) கரூர் -639 117.
சகல தொடர்புக்கும்:
சகோ:R. செல்வராஜ், சபை ஊழியர்
80122 34475



- வேகமாய் பறக்கும் பறவை - உபா.28:50
- கன்மலையிலும், கன்மலையின் சிகரத்திலும், அரணான ஸ்தலத்திலும் தங்கி வாசம்பண்ணும் - யோபு 39:28
- இது அசுத்தமான பறவைகளில் ஒன்று - லேவி.11:13
- இது குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்றுக் கொடுக்க உயரமான கன்மலையிலுள்ள தன் கூட்டிலிருந்து அவைகளை தள்ளி, அக்குஞ்சுகள் கீழே விழப்போகும் சமயத்தில் தன் பெரிய செட்டைகளை விரித்து தாங்கும் - உபா.32:11
- கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் இவைகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள் - ஏசா.40:31
- வெளிப்படுத்தின விசேஷத்தில் நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாக சொல்லப்பட்டுள்ளது - வெளி.4:7






சிறுவர் பகுதி

## ஏன் உங்களுக்கு விசுவாசமில்லாமற்போயிற்று?

வேதபகுதி: மாற்கு 4:35-41

K.Mohan



என் அருமைப் பிள்ளைகளுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று விசுவாசத்தைக்குறித்து பார்ப்போம். மேற்கண்ட வேதபகுதியில் இயேசு தம்முடைய சீஷர்களுடன் படகிலே செல்வதை வாசிக்கிறோம். அப்பொழுது பலத்த சுழல்காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக, அலைகள் அதின்மேல் மோதிற்று. அப்பொழுது இயேசு கப்பலின் பின்னணியத்தில் தலையணையை வைத்து நித்திரையாயிருந்தார். அவர்கள் சற்றும் யோசிக்காமல் அவரை எழுப்ப ஆரம்பித்தனர். நீங்களா இருந்தா அப்படி செய்திருப்பீர்களா?

எப்படி எழுப்பினார்கள் தெரியுமா? போதகரே, நாங்கள் மடிந்துபோகிறது உமக்குக் கவலையில்லையா என்று எழுப்பினார்கள். அவர்களை சிருஷ்டித்த கர்த்தர், உடன் இருந்தும் அவர்களுக்கு நம்பிக்கை வரவில்லை என்ன ஆச்சரியமாக இருக்கிறது பார்த்தீர்களா? நாமும் கூட சில வேளைகளில் அப்படித்தான் மாறிவிடுகிறோம். நான் உங்களை விட்டு விலகுவதுமில்லை உங்களை கைவிடுகிறதுமில்லை என்று கர்த்தர் சொல்லிய வசனத்தை மறந்தவர்களாக போய்விடுகிறோம். அதைப்போல சீஷர்கள் மறந்துவிட்டார்கள். ஆகையால் அவர்கள் பயந்துபோய் போதகரே, என்று அவரை எழுப்ப ஆரம்பித்தனர்.

அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து; இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. “அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்” என்று சங்கீதம்33:9-ல் வாசிக்கிறபடி அவர் சொன்னபடி ஆயிற்று. அவர் அவர்களைப் பார்த்து என்ன சொன்னார் தெரியுமா? ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்று கேட்டார். நாமும் இயேசு நம்மோடு இருப்பதை மறந்து பயந்தோம் என்றால் நம்மையும் பார்த்து இப்படித்தான் கேட்பார். “விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்” (எபி.11:6).

மனப்பாட வசனம்

“விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” - எபிரெயர்11:1.



தி வேர்ட் ஆப் கிறைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 16 பிப்ரவரி-2016 கனி - 3

ஆசிரியருரை

## மனுஷி - Women



LDனுஷனிலிருந்து உருவாக்கப் பட்டவள்தான் மனுஷி. பெண்கள் பிள்ளைகளை பெறுகிறார்கள். ஆண்பிள்ளையாக இருந்தாலும், பெண்பிள்ளையாக இருந்தாலும் இரண்டுபேரையுமே பெற்றெடுப்பது பெண்கள்தான். ஆனால் முதலாவது பெண் உருவாக்கப்பட்ட விதம், ஆணுடைய விலா எலும்பிலிருந்து தேவனாகிய கர்த்தர் மனுஷியை உருவாக்கினார் என நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" என காண்கிறோம் (ஆதி.2:22). இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் காரியம் என்னவென்றால் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான் பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டபடியால் அவன் குடும்பத்தின் தலைவனாக ஏற்படுத்தப்பட்டான். ஆகையால் எல்லா ஆண்களும் குடும்பத்தின் தலைவர்களுடைய பட்டியலில் முதலாவது வகிக்கிறார்கள். இந்த மனுஷியானவள் ஆதாமுக்கு ஏற்ற துணையாக உருவாக்கப்பட்டாள் என காண்கிறோம்.

"பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). உலகத்திலே எத்தனையோ விதவிதமான கனி மரங்கள், விதவிதமான பூக்கள், விதவிதமான மிருகஜீவன்கள் இருந்தபோதும். தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கு ஏற்றதுணை காணப்படவில்லை. ஆகையால் தேவன் தம்முடைய சித்தத்தின்படி அவனுடைய விலா எலும்பை எடுத்து அவனைப்போல மாம்சமும் எலும்புமுடைய ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார். அதுவே அவனுக்கு ஏற்றதுணையாக காணப்பட்டது. ஆகையால் இன்றுவரை மனிதன் என்னவெல்லாம் சம்பாதித்தாலும், பல பங்களாக்களை கட்டினாலும், கடல்கடந்து பணியாற்றினாலும், கைநிறைய சம்பாதித்தாலும் அவனுக்கு ஏற்றவேளையில் ஒரு திருமணம் செய்யவேண்டுமென்று அவனைப்பெற்ற பெற்றோர்கள் ஒரு நல்ல குணமுள்ள பெண்ணைப் பார்க்கிறார்கள். அதுவே அவனுக்கு ஏற்றதாக இருக்குமென்று நினைக்கிறார்கள். இது தேவனுடைய திட்டத்திலிருந்து வந்த

ஒன்றுதான். இதை மட்டும் எல்லா மதத்தவர்களும் சரியாக இன்றுவரை செய்கிறார்கள். அதைப்போல கைக்கொள்ளவேண்டிய போதனைகள் வேதாகமத்தில் நிறைய உண்டு. அதையும் செய்வார்களேயானால் அவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்பார்கள்.

சிறுபிள்ளைகள் வளர்ந்து வரக்கூடிய நாட்களில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களையும், கண்ணாடி தொட்டியில் வளர்க்கப்படும் பலவண்ண மீன்களையும் நேசிப்பார்கள். அதைபோல பூனைகளையும் ஆடு மாடுகளையும் கூட நேசிப்பார்கள். ஆனால் அதுவே அவர்களுக்கு ஏற்றதுணையாகிவிடுமா? துணையாக முடியாது. சிலர் நாய் நன்றியுள்ளது என்பார்கள். உண்மைதான். ஆனால் நாய் நாய்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதை நாம் வீட்டைக் காக்கவும் மீதமானதை கொடுத்து அவைகளை வளர்க்கின்றோம். அது இருக்கவேண்டிய இடத்திலே தான் இருக்கவேண்டும். நாம் படுக்கும் இடத்தில் அவைகளை நாம் படுக்க வைப்பதில்லை. ஒரு வேட்டைக்காரர் ஒரு முறை சிறுத்தை குட்டி ஒன்றை வேட்டையாடபோன இடத்தில் பார்த்து அதை எடுத்து வந்து தன் பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிறார். அந்த சிறுத்தை குட்டி அவர்களோடே விளையாடவும் அவர்களை சந்தோஷப்படுத்தவும் செய்தது. இதைப் பார்த்த வேட்டக்காரர் நம்முடைய பிள்ளைகளுக்கு பொழுதுபோக நல்ல ஒரு நண்பனை அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். நாம் தைரியமாக எங்கும்போய்வரலாம். நம்முடைய பிள்ளைகள் அந்த சிறுத்தைக்குட்டியோடு விளையாடி நம்மை மறந்தநேரத்தில் நாம் மற்றவேலைகளை முடித்துவிடலாம் என்று அந்த சிறுத்தைக்குட்டியோடு அவர்களை விளையாட விட்ட பின்பு வேட்டைக்காரர் மற்றவேளைகளை கவனிக்க சென்றுவிடுவார். பின்பு வருவார் அவர்கள் சிறுத்தைக்குட்டியோடு விளையாடிக்கொண்டிருப்பார்கள். அல்லது விளையாடிய களைப்பில் தூங்கிவிடுவார்கள். இப்படியே நடந்துகொண்டிருந்தது. சிறுத்தையும் வளர ஆரம்பித்தது. அவர்களோடு சேர்ந்து எல்லாவற்றையும் சாப்பிட ஆரம்பித்தது.

ஒரு முறை வேட்டைக்காரன் நான் வெளியில் செல்கிறேன் வர இரண்டொரு நாட்கள் ஆகும். நீங்கள் கவனமாக இருங்கள். நம்முடைய காம்பவுண்டை விட்டு எங்கும் போகாதிருங்கள் என்று சொல்லி சென்றுவிட்டார். வழக்கம்போல பிள்ளைகள் தன்னுடைய செல்ல சிறுத்தையோடு விளையாட ஆரம்பித்தார்கள். அப்பொழுது காம்பவுண்டு ஓரத்தில் உள்ள ஒரு முட்புதரில் ஒருவன் விழுந்துவிட்டான். அவனுடைய உடம்பிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது. இதைப்பார்த்த சிறுத்தை அவனுடைய முகத்தை நக்கிக்கொடுக்க ஆரம்பித்தது. அது தன்னை நேசித்து இவ்விதமாக செய்கிறது என்று நினைத்தான். சிறுத்தைக்கு இரத்தத்தின் மீது ஆசை ஏற்பட சற்று ருசித்து நக்கிக்கொடுக்க ஆரம்பித்தது. அது அதிகரிக்கவே தன் ஏஜமானை மறந்து தன்னுடைய சுபாவகுணத்தினால் கடிக்கவும் தன் கால்களால் கீறவும் செய்தது, மற்ற சிறுவர்களின் உயிர்போகும் அளவிற்கு அவர்களையும் சின்னாபின்னமாக்கியது. கத்தினாலும் கேட்பார் இல்லாமற்போகவே அனைவரும் அதே இடத்தில் சிறுத்தைக்கு பலியானார்கள். பின்பு அந்த சிறுத்தை காட்டைநோக்கி செல்ல ஆரம்பித்தது. வேட்டைக்காரன் வந்து தன் வீட்டைப்பார்க்கும்போது கதறி அழுதான். பெரிய தவறு செய்துவிட்டேன் என்று கதற ஆரம்பித்தான்.

அன்பானவர்களே, இந்த உலகத்தில் ஒரு மனிதனுக்கு ஏற்ற துணை என்பது அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்திரீயே என்பதை நாம்



**அவ பக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி (தீத். 2;11,12).**

2. இரத்தத்தினால் **(எபே.1:7).**

3. ஒவ்வொரு மனிதனுக்காகவும் கிறிஸ்து மரணத்தை ருசிபார்த்தார் (எபி.2:9). ஆனால் எல்லாரும் இரட்சிக்கப்படப்போவதில்லை (மத்.7:13,14 ஆனபடியால் (இயேசுவின்) இரத்தத்தை அடைவதற்கு மனிதன் கட்டாயமாக ஏதாவது செய்யவேண்டும். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுவது.

**II. தேவகிருபையை விசுவாசத்தின் வழியாகவே அடைகிறோம்.**

**அ. கிருபை என்பது தேவனுடைய பங்கு விசுவாசம் என்பது மனிதனுடைய பங்கு. தேவகிருபைக்கு மனிதன் செவிசாய்ப்பது.**

இவ்விதமாக நாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். அவர் மூலமாய் நாம் இந்தக் கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை விசுவாசத்தினால் பெற்று நிலை கொண்டிருந்து, தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம் (ரோம.5:1,2).

**அ. இரட்சிப்பு என்பது மனிதனால் தீட்டப்பட்ட திட்டமன்று.**

1. அது தேவனிடமிருந்து வந்தது, மேலும், சகோதரரே என்னால் பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷம் மனுஷருடைய யோசனையின்படியான தல்லவென்று உங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் அதை ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை,மனுஷனால் கற்றதுமில்லை. இயேசு கிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார் (கலா.1:11,12).

2. இந்தத் திட்டத்துக்கு தகுதியாகும் படியோ சம்பாதிக்கும்படியோ நாம் ஒன்றும் செய்யவில்லை. இரட்சிப்பு என்பது தேவனிடமிருந்து வரும் ஈவு. நம்முடைய இரட்சிப்பு நம்முடைய கிரியையினாலோ அல்லது கிரியையிலிருந்தோ வருவதில்லை.


**இ. விசுவாசத்திலே என்ன ஈடுபடுகிறது? எல்லா கிரியைகளும் நீக்கப்பட்டால், ஞானஸ்நானத்தைப் பற்றி என்ன? இந்த வார்த்தைகள் 1-7 வார்த்தையின் சுருக்கம். மேலும் உண்மையிலே விசுவாசத்தை மட்டும் ஒருவர் நம்புவதில்லை, அநேகர் விசுவாசத்தோடு நீங்கள் ஜெபிக்கவோ அது தொடர்பானது செய்யவோ வேண்டுமென்கின்றனர்.**

1. அக்கிரமங்களிலே நாம் மரித்திருந்தோம் (எபே.2:5)
2. கிறிஸ்துவுடனே கூட நாம் உயிர்ப்பிக்கப்பட்டோம் (2:5)
3. கிறிஸ்துவுடன் கூட எழுப்பப்பட்டோம் (2:6)
4. நாம் கிறிஸ்துவோடு உன்னதங்களிலே உட்காரும்படி எழுப்பப்பட்டோம் (2:6).
5. **மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோ.6:4)**
6. கொலோ.2:12 உடன் ஒப்பிட்டுப்பாருங்கள். **ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்து தேவனுடைய செயலின் மேலும் விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்களே (கொலோ.2:12)**
7. இந்த விதமாக ஞானஸ்நானம் என்பது முன்னால் பவுலால் முன் சொல்லப்பட்ட 7-8 ஆகிய வசனங்களிலுள்ள சொற்றொடர்களில் உணர்த்துகிறார்
8. ஞானஸ்நானம் இரட்சிக்கிறது. ஒரு கிரியையாக அல்ல. ஆனால் தேவனுடைய கிரியையில் விசுவாசத்தை அறிவிக்கிற ஒரு பகுதியாக கிரியை செய்கிறது. நாம் முழுகப்பட்டதினாலே இரட்சிக்கப்படவில்லை. ஆனால் கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார் நாம் விசுவாசத்தினாலே அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிகிறோம்.
9. ஞானஸ்நானம் என்பது அடிப்படையில் தேவனுடைய வேலை. அவர் மன்னிக்கிறார். அவர் உயிரோடு எழுப்புகிறார். வாழச்செய்கிறார். விசுவாசம் என்பதன் வரிசையிலே ஞானஸ்நானம் பொருந்தும், கிரியைகளின் வரிசையில் அல்ல.

## பாடம் -17 கிருபையினால் வரும் இரட்சிப்பு

## Salvation By Grace

*- Jerry Bates*




**எபேசியர் 2:7-10**

1.தேவனுடைய கிருபையைப் பற்றிய பாடத்தைக் காட்டிலும் பெரிய பாடம் வேறொன்றுமில்லை.

2. புதிய எற்பாட்டில் இதை விடவும் நிந்திக்கப்பட்டதும், தவறாக பயன்படுத்தப்பட்டதுமான பாடமும் வேறொன்றுமிருக்காது.(2:8,9)

3. மத சம்பந்தப்பட்ட உலகிலும் சபையிலும் தேவகிருபையைப் பற்றி ஒருமனதாய்ப் பேசுதல் உண்டு.

அ. சிலர் கிருபையென்று மனிதனுடைய பொறுப்பை குறைத்து, இரட் சிப்பை தேவனுடைய கிருபையினால் வருகிறதென்று வலியுறுத்திச் சொல் லுகின்றனர்.இரட்சிக்கப் படுகிறோம். விசுவாசத்தின் மூலமாக மட்டுமே இரட்சிக்கப்படுகிறோம்.

1. செய்தித்தாளில் ஒருவர் எழுதினார். "தேவன் ஒரு மனிதனுடைய இருதயத்தில் விசுவாசம் மற்றும் மனந்திரும்புதலின் ஈவையும் சேர்த்து வைத்தால்...."

2. ஒருவருடைய இருதயத்தில் ஏன் தேவன் விசுவாசத்தையும் மனந்திரும்புதலையும் சேர்த்து வைக்கக்கூடாது?

3. அவர் மேலும் எழுதினார்: "விசுவாசமானது தேவன் தம்முடைய சீஷர்கள் பின்பற்றும்படி கட்டளையிட்டிருக்கின்றவற்றிற்குக் கீழ்ப்படிய அர்ப்பணிக்கிறது". தேவன் நமக்கு அர்ப்பணிப்புகளைக் கொடுத்திருக்கிறாரா?

ஆ. எபேசியர் 2:1-7 கிரேக்க மொழியில் ஒரு நீண்ட வாக்கியம் 8-ம் வசனம் இதற்காக என்னும் அர்த்தத்தோடு துவங்குகிறது. இந்த சந்தர்ப்பத்தில் இந்த வார்த்தை அத்தோடு விளக்கும் படியான ஒரு செயலைச் செய்கிறது. இந்த வசனங்கள் சாயலில் சுருக்கமாக 1-7 வசனங்களில் சொல்லப்பட்டதையே விளக்குகிறது.

5. இந்த சில வசனங்கள் இரட்சிப்புக்கான தேவனுடைய திட்டத்தை சுருங்கச் சொல்லுகிறது.

**I. கிருபையினாலே நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள், கிருபையே நம் இரட்சிப்புக்கான தளம். நாம் ஒருபோதும் தேவனுடைய கிருபையையும் இரட்சிப்பிற்கான அருடைய ஈவையும் குறைத்து மதிப்பிடக் கூடாது.**

**அ. கிருபையென்றால் என்ன? நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுகிறோமென்றால், கிருபையென்றால் என்னவென்று நாம் புரிந்துக் கொள்ளவேண்டும்.**

1. கிருபை என்பது தகுதியற்றவருக்குக் கிடைக்கும் நன்மை.

2. நம் எல்லாருக்கும் இரட்சிப்பு வேண்டும் (ரோம.3:23) ஆனால் அதற்கு நாம் தகுதியானவர்களல்ல.

**ஆ. தேவ கிருபை கடல்கடந்து எல்லா, மனிதருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அருளத் தக்க தேவ கிருபை வெளிப்பட்டிருக்கிறது (தீத்.2:11)**

1. தேவன் அவருடைய குமாரனை நமக்காக மரிக்கும்படி அனுப்பினார். **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே,தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (ரோம.5:8).**

2. இது முற்றிலும் அன்பில் செய்யப்பட்டது. தேவையினிமித்தம் அல்ல. தேவன் அவருடைய கிருபையை பொழிகிறார். தேவனோ செயலாற்றலுள்ள கிரியை செய்கிறவர்.

இ. கிருபையினால் எப்படி மீட்கப்படுவது?

1. ஒரு திட்டத்தைக் கொண்டு அதை விளக்கலாம். **ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம்**



அறிந்துகொள்கிறோம். மிருகங்களோ, அல்லது மற்றவைகளோ ஒருவனுக்கு ஏற்றதல்ல. இதை தேவனாகிய கர்த்தர் முதலாவது அறிந்தார். ஆகையால் ஆதாமுக்கு ஏற்ற துணையாக ஏவாளை அவனுடைய விலா எலும்பிலிருந்து சிருஷ்டித்தார்.

ஸ்திரீயானவள் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடி என வேதம் அவளைக்குறித்து சொல்லுகிறது. "உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்" (சங்.128:3). இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் அவர்கள் இவ்விதமாக கனிகளை கொடுக்கக்கூடிய திராட்சக்கொடியைப்போல் இருப்பார்கள். பெண்கள், ஆண்களுக்கு உதவியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்பதை நாம் ஒருநாளும் மறந்து போகாதிருப்போம். இன்றைய நவீன உலகில் இருவர் வேலைக்கு சென்றுதான் குடும்பம் நடத்தவேண்டும் என்று வேலைக்குப்போகும் பெண்களை நாம் அதிகமாக பார்க்கிறோம். இருவரும் வேலைக்கு சென்று கைநிறைய சம்பளம் வாங்குகிறார்கள். குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை யார் பார்ப்பது? அதைப்பற்றி அவர்கள் சற்றும்யோசிப்பதில்லை. திட்டமிடுகிறார்கள் ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்ட திட்டங்களுக்கு ஒத்தார்போல தங்களை மாற்றியமைத்துக் கொள்வதில்லை.

வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியென்றாள். அவள் வீட்டை அழகு படுத்தவேண்டிய பொறுப்பில் இருக்கிறாள். வீட்டோரத்தில் திராட்சசெடி கனிகொடுத்துக்கொண்டிருந்தால் அது எப்படியிருக்கும். அந்த குடும்பத்தையே திராட்சை ரசத்தால் திருப்தியாக்குமல்லவா? மேலும் அந்த செடி வீட்டோரத்தில் இருப்பதால் அதற்குவேண்டிய தண்ணீர் மற்றும் சத்தான உரங்கள் அதற்கு அவ்வப்போது கிடைத்துக்கொண்டே இருக்கும். ஆகையால் வீட்டோரங்களில் உள்ள திராட்சச்செடி அதினதின் காலத்தில் தவறாமல் கனிகொடுக்குமல்லவா? அதைப்போல அந்த ஸ்திரீயானவளும் இருப்பாள். "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" என்ற நீதி.14:1-ம் வசனத்தின் படி அநேக ஸ்திரீகள் தங்களுடைய வீட்டை கர்த்தருடைய ஞானத்தைக் கொண்டு கட்டுகிறார்கள். சிலர் தங்கள் கைகளினாலே தாங்கள் கட்டின வீட்டை இடிக்கிறார்கள். இது எப்படி முடியும் என நீங்கள் நினைக்கலாம். உங்கள் வீட்டில் நடக்கும் சின்னசின்ன சண்டைகளையும் பெலவீனங்களையும் பக்கத்து வீட்டில் சொன்னாலே போதும் அது உங்கள் வீட்டை நீங்களே இடிப்பதற்கு சமம். ஆனால் "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன் வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள்" (நீதி.31:10-16). இப்படிப்பட்ட ஸ்திரீயானவள் "சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்;

அவள் புருஷனும் அவளைப்பார்த்து; அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ, அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்" (நீதி.31:27-29). இந்தவிதமான ஸ்திரீயைப்போல நீங்கள் இருக்கின்றீர்களா? குணசாலியான ஸ்திரீகளாக இருந்துகொண்டு உங்களுடைய வீட்டைக்கட்டுங்கள்.

கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு ஸ்திரீயாக இருக்கப்பிரயாசப்படுங்கள். வேதம் சொல்லுகிறது; "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதி.31:30). சில பெண்கள் கர்த்தருக்கு பயப்படுவார்கள். ஆனால் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படியாதிருப்பார்கள். கர்த்தருக்கு நீங்கள் எப்படி கீழ்ப்படிகின்றீர்களோ அதைப்போல தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கணவனுக்கும் கீழ்ப்படியவேண்டும். வேதமும் அப்படியே போதிக்கிறது. "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள்" (எபே.5:22). இதை பவுல் தன்னுடைய யோசனையாக சொல்லவில்லை பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி சொல்லுகிறார். ஆகையால் எல்லா ஸ்திரீகளும் இந்த வசனத்திற்கு கீழ்ப்படியவேண்டியவர்களாயிருக்கிறார்கள். வேதாகமத்தில் அநேக பக்தியுள்ள ஸ்திரீகளைப் பற்றி படிக்கிறோம். அதில் குறிப்பாக ஆபிரகாமின் மனைவி சாராளைக் குறித்துப்படிக்கும்போது; அவள், "ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார் (1பேது.3:6). இவள் எல்லோருக்கும் தாயானவள். இவள் தேவனுக்கும் தன் கணவனுக்கும் கீழ்ப்படிந்திருந்தாள். இவளைப்போல நீங்கள் இருப்பீர்களானால் இவளுக்கு குமாரத்திகளாயிருப்பீர்கள். ஒரு பெண்ணானவள் தன் குடும்பத்தில் மிக முக்கியமானவளாக இருக்கிறாள் என்று நாம் அறிகிறோம். ஆகையால் தேவன் என்ன நோக்கத்திற்காக மனுஷியை உண்டாக்கினாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு பெண்ணானவளுக்கு இருக்கிறது. அதை உணர்ந்து பெண்கள் தாங்கள் பெற்றெடுக்கிற பெண்பிள்ளைகளுக்கும் அந்த விதமான போதனைகளை கொடுத்து அவர்களை கர்த்தருக்கு ஏற்றவர்களாக வளர்க்கவேண்டிய பொறுப்புடையவர்களாக பெண்கள் இருக்கிறார்கள். இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அருமையான சகோதரியே, நீ தேவனால் அவருடைய அற்புதமான கரத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்திரீ என்பதை மறந்துபோகாதே! உன் மூலமாகவே சந்ததிகள் பெருக தேவன் திட்டமிட்டுள்ளார் அந்த திட்டத்திற்கு இசைவாக செயல்படுவாயானால் கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பார்.

**பெண்கள் மட்டுமே கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டுமா?**

இது ஒரு நல்ல கேள்வி. இருவருமே தேவனால் சிருஷ்டிக்கப் பட்டவர்கள்தான். முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான் பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். இருவருமே கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந் திருக்கவேண்டும். மேலும், "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந் திருக்கவேண்டும்" என பவுல் எபேசு கிறிஸ்தவர்களுக்கு எழுதின புத்தகத்தில் படிக்கிறோம் (எபே.5:21). இருவருமே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க போதிக்கப்படுகிறார்கள். அதினாலே ஒருவர்மேல் ஒருவர் ஆதிக்கம்செலுத்தமுடியாது.





# ராகாப் - RAHAB

-Paula Bates

**- சென்ற மாத இதழின் தொடர்ச்சி**

எரிகோவின் கதையை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள்: அவர்கள் கர்த்தர் கட்டளையிட்டிருந்தபடி 7 நாட்கள் அந்த நகரத்தைச் சுற்றி வந்தார்கள். மேலும் ஜனங்கள் 7வது நாள் வரை அமைதியாக இருந்தார்கள். அதன்பின் மதில்கள் 7 வது நாள் இடிந்து விழுந்தது.

அவர்கள் ஒரு சேனை அல்ல எனவே அவர்கள் நகரத்தைப் பிடிக்க முழுவதும் கர்த்தரைச் சார்ந்திருந்தார்கள்.

யோசுவா 6:21 ஜனங்கள் பட்டணத்திற்குள் சென்று ஒவ்வொருவரையும் சங்காரம் பண்ணினார்கள் குழந்தைகளையும் மிருகங்களையுங்கூட சங்காரம் பண்ணினார்கள். ஏன்? எபி.11;31 எரிகோ ஜனங்களின் அவிசுவாசத்தினால் அவர்களை அழித்துப்போட்டார்கள்.

ராகாபும் அவளுடைய குடும்பத்தாரும் ஏன் விடுவிக்கப்பட்டார்கள்? விசுவாசத்தினால் - அவர்கள் கர்த்தருடைய வல்லமையை விசுவாசித்தார்கள் மேலும் அவர்கள் வேவுக்காரரை விசுவாசித்து தன்னுடைய வீட்டிலே தங்கப்பண்ணினார்கள்.

ஏனென்றால் எரிகோ பட்டணத்தை அழிப்பதற்காக ராகாபினால், இஸ்ரவேலர் கர்த்தருடைய திட்டத்தைப் பின்பற்றினார்கள். யோசுவா தேசம் முழுவதும் அறியப்பட்டவனானான்.

அநேகமாக தாவீது ராஜாவின் முற்பிதாக்களாயிருந்த ரூத்தை திருமணம் செய்த போவாசின் தாயாக இருக்கிறாள் மத்.1:5. ஆனபடியினால் கிறிஸ்துவின் வம்சமாயிருக்கிறது.

**ராகாபினுடைய விசேஷித்த குணங்கள்:**

- சுறுசுறுப்புள்ளவள் - சணல் நெய்கிறவள்
- தன் குடும்பத்தை நேசித்தாள் - அவர்களுக்கு என்ன நடக்கும் என்ற கவலை கொண்டவள்.
- புத்திசாலியும் விழிப்புமுள்ளவள்.
- துணிச்சலுள்ளவள்.
- தேவனை விசுவாசித்து ஆபத்து கடந்து போகும் மட்டும் தன்னுடைய குடும்பத்தாரை தன் வீட்டில் தங்க வைத்திருந்தாள் (தன்னைச் சுற்றிலுமிருந்த மதில்களும் நகரும் அழிக்கப்பட்டிருந்த போதிலும் கூட)

அவள் மற்ற ஜனங்களோடு மதில்களில் உட்புறம் சென்றிருந்தால் என்ன நடந்திருக்கும். அது பாதுபாப்பான இடமாகக் காணப்பட்டதா? எரிந்து போனது.

அவள் தன் குடும்பத்தாரோடுகூட சிறுபான்மை சமுதாயத்தை சேர்ந்தவளாயிருந்தாள். அவள் விசுவாசித்தபடி உறுதியாக தங்கியிருந்தாள்.

இஸ்ரவேலர் அவளிடமிருந்து மிகவும் வேறுபட்டவர்களாயிருந்தாலும் கூட அவள் தேவனோடும் அவருடைய ஜனங்களோடும் குடியிருந்தாள்.

அடங்கியிருந்தால் தான் அவர் நம்மை உயர்த்துவார். ஆம், முடிவில் என்ன நடந்தது? "...... தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, .........எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலி.2:9-11). நமக்கு வரும் பிரச்சனைகளில் 'Prestige Issue' என்னால் விட்டுக்கொடுத்து தாழ்ந்து போக முடியாது என சொல்வோமானால் மிகுந்த வேதனையடைய வேண்டியிருக்கும் நம்முடைய பிடிவாதம் ஒருபோதும் நமக்கு வெற்றியைக் கொண்டுவராது. "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர் களாக எண்ணக்கடவீர்கள்" (பிலி.2:3) என வேதம் கூறுகிறது.

அன்பு சகோதரியே, கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மில் இருக்குமானால், கிறிஸ்துவைப் போல தேவனுக்குக் கீழ்ப்படிந்து, நம்மை நாமே தாழ்த்தி, தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியும். அப்படியிருக்கும் போது கிறிஸ்துவை தேவன் உயர்த்தியது போல நம்மையும் உயர்த்துவார். "கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்.4:10). தேவன் தாமே நமக்கு உதவிசெய்வாராக!.




**JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW**

Contact: 94435 58041


தெரிந்து கொள்வோம்

## தெரியுமா?

- K.R.K.Ravi Asir
Associate Editor

▶ உலகில் முதன்முதலாக அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரத்தில் கண் வங்கி ஏற்படுத்தப்பட்டது.

▶ 'பேரியாழ்' என்னும் பண்டைய இசைக் கருவியில் 21 வகையான நாதங்களை இசைக்கலாம்.

▶ உலகின் மிகப் பெரிய மிதவைப் பாலம் அமெரிக்காவில் வாஷிங்டன் மாநிலத்திலுள்ள சீட்ஸ் என்னுமிடத்தில் உள்ளது.

▶ ஒரு நாட்டிகல் மைல் என்பது 1-85 கி.மீ தூரத்தைக் குறிக்கும். இது கடலில் தூரத்தை அளக்க பயன்படுத்தப்படுகிறது

▶ ரவீந்திரநாத் தாகூர் ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடகத்தை வங்காள மொழியில் மொழிபெயர்த்த போது அவருக்கு வயது பதிநான்கு.


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். 9443558041







கர்த்தர் சபையை நேசிப்பதுபோல ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இருவருமே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் தேவனை இருவரும் மகிமைப்படுத்தவேண்டும். இருவராக இருந்தாலும் இருவருமே ஒரே சரீரமாக இருக்கிறார்கள். இது எத்தனை உண்மையான காரியம். ஆதாமிலிருந்து ஏவாள் எடுக்கப்பட்டாள். ஆகையால் இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள் என்று சொல்லி மனுஷி என்று ஆதாம் பெயரிட்டான். ஆக, இருவருமே ஒரே சரீரமாக இருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக் கக்கடவன் என காண்கிறோம். கர்த்தருடைய திட்டத்தின்படி குடும்பங்களை கட்டுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுடைய வீட்டைக் கட்டுவார். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

ஜெபியுங்கள்

⏩ அடுத்த மாதம் இரண்டு இடங்களில் சகோதரிகள் கூட்டம் நடைபெறவுள்ளது அதற்காக...

⏩ இம்மாதம் கடந்துசெல்லவுள்ள 4-வது சுவிசேஷ பயணத்திற்காக...

⏩ வாலிபர்கள் சத்துருவை கர்த்தருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே ஜெயிக்க...

⏩ புதிய ஆத்துமாக்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைய...

⏩ கர்த்தருடைய சபை தமிழகத்தில் வளர்ந்து பெருக...

### நடப்புச் செய்திகள்

▶ வெள்ள பாதிப்பை தடுக்க கடலோரத்தில் கிராம அளவில் பேரிடர் மேலாண்மை திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

▶ சிற்ப சாஸ்திர ஆகம விதிப்படி புதைபொருளாக கண்டுபிடிக்கப்படும் எந்த வகை சிலைகளையும் வழிபட கூடாது என, அருங்காட்சியத்துறை தெரிவித்துள்ளது.

-நன்றி தினமலர்

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய சுவிசேஷகர்கள் (வாலிபர்கள்) தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

**"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கேஇருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" யோவான்12:26.**

**தொடர்புக்கு :94435 58041**

'ஒரே வழி' வேதபாடம் The Master Course படிக்க விரும்புகிறவர்கள் இன்றே தபால் செலவுக்காக ரூபாய் 50-ஐ அனுப்பி, ஒரு வருடத்தில் பயின்று Certificate பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.

**Batlagundu Bible College,
Post Box No. 5,
Batlagundu-624 202, S.INDIA**

**பாதுகாப்பான இருசக்கர வாகனப் பயணத்திற்கு ஹெல்மெட் அணியுங்கள்**





# இயேசுகிறிஸ்து
# JesusChrist

J.C.Choate

**இ**யேசுகிறிஸ்துவைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? அப்படி யென்றால், அவரைக் குறித்து எவ்வளவு தூரம் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்? அவர் தம்மை தேவனுடைய குமாரன் என்று கூறியதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அவருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவனாகவும், அவருடைய சபையின் அங்கத்தினனாகவும் இருக்கிறீர்களா?

இயேசுகிறிஸ்து வாழ்ந்தார் என வேதாகமம் மட்டும் கூறவில்லை, ஆனால் வரலாறு முதற்கொண்டு இதை உண்மையென உறுதிப்படுத்துகிறது. நமது நாட்காட்டியும் கூட **B.C.** என்பது கிறிஸ்துவுக்கு முன் எனவும் **A.D.**என்பது கிறிஸ்துவுக்குப்பின் எனவும் அறிவிக்கிறது. இயேசு வாழ்ந்தார் என்பதும் தொடந்து ஜீவித்து வரலாற்றை மாற்றுகிறார் என்பதும் உண்மையாகும். கலை, இசை, சட்டம், அறிவியல் மேலும் நம்முடைய ஒவ்வொரு கலாச்சாரமும் இயேசு கிறிஸ்துவின் ஜீவியத்தினால் மாற்றம் அடைந்திருக்கிறது. இந்தக் காரியங்கள் கிறிஸ்து வாழ்ந்தார் என்ற உண்மைக்குச் சான்றுகளாக இருக்கின்றன.

தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது ஆதியாகம புத்தகத்தில் முதன்முறையாக கிறிஸ்துவைக் குறித்து வாசிக்கின்றோம். மனிதனுடைய சிருஷ்டிப்பின் விஷயத்தில் ''பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின் படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்'' (ஆதி.1:26,27). என வாசிக்கின்றோம். தேவன், ''மனுஷனை உண்டாக்குவோமாக ...'' என்று சொன்னதைக் கவனியுங்கள். படைப்பில் உடனிருந்த இன்னொரு நபர் யார்? அந்த நபர் கிறிஸ்துவே என வேதவாக்கியம் திரும்பத் திரும்பக் குறிப்பிடுகிறது. தேவன் எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து மூலமாய் சிருஷ்டித்தார் (எபே.3:9) என புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறான். மீண்டும், பவுல் கிறிஸ்துவைக் குறித்துப் பேசி, ''ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்தி லுள்ளவைகளும், பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப் பட்டது'' (கொலோ1:16) என அறிவிக்கிறான். கிறிஸ்துவைப்பற்றி யோவான், ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' (யோவா.1:3) என்கிறான்.

வேதாகமத்தின் பழைய ஏற்பாடு முழுவதிலும், மீண்டும் மீண்டும் கிறிஸ்துவினுடைய பிரசன்னத்தைப் பற்றி நாம் வாசிக்கிறோம். அவர் கிறிஸ்து



மேலான நாமத்தை அவருக்குத்தந்தருளினார்'' (பிலி.2:6-11). இயேசுவானவர் தம்மைத் தாமே தாழ்த்தினார், ஆதலால் தேவனால் உயர்த்தப்பட்டார். நீங்களும், நானும் எப்படியிருக்கிறோம்? சற்றே வேதாகமத்தின் வெளிச்சத்திலே நம்மை நிதானித்து அறிவோம். மனமேட்டிமை, பெருமை, அகந்தை போன்றவைகள் நம்மிடம் காணப்படுகிறதா? நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம் பிசாசின் பிள்ளைகளுக்கு முன் நாம் எப்படி தாழ்ந்து போவது என எண்ணுகிறீர்களா? உங்களுடைய நாமங்கள் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட்டிருப்பது பற்றி சந்தோஷப்படுங்கள் என்று தான் நமதாண்டவர் சீஷர்களைப் பார்த்துக் கூறினாரேயன்றி பெருமைகொள்ளுங்கள் எனக் கூறவில்லை. ''அவர்....... தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..... கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' (பிலி.2:6-8) என வாசிக்கிறோம். நமதாண்டவராகிய கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நம்மிலும் இருக்கக்கடவது. நமதாண்டவரே தேவனுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்தாரென்றால் அவரைப்பின்பற்றுகிற நாம் எவ்வளவு அதிகமாகக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தம் செய்ய வேண்டும்! நம்முடைய மரணபரியந்தம் கர்த்தருக்குக் கீழ்ப்படிவோம் கீழ்ப்படிவதும், நம்மைத் தாழ்த்துவதும் கடினமாகயிருக்கிறதென்று சொல்வோமானால் நிச்சயமாக உயர்த்தப்படமாட்டோம். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

**அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம்:** கிறிஸ்துவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்தும்படி அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருப்போம். ''....... ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' (1பேது.5:6) என வேதம் கூறுகிறது. கிறிஸ்துவர்களாகிய நமக்கு இவ்வுலக ஜீவியம் எப்போதும் சாதகமாக இருக்கும் எனக் கூறஇயலாது. சிலவேளைகளில் கிறிஸ்தவ ஓட்டத்தில் பிரச்சனைகளும், தோல்விகளும் வரலாம். சமுதாயத்தில் நம்முடைய பக்தியின் ஜீவியத்தையும், உண்மையான நடக்கையினையும் உலகத்தார் பார்த்து பொறுக்கக் கூடாமல் பொறாமை கொண்டு நம்மைக் குற்றப்படுத்திக் கொண்டேயிருக்கலாம். இவ்வாறு இவ்வுலகம் நம்மை குற்றப்படுத்தும்போது, இயேசுவையும் குற்றப்படுத்தியது என்பதை நினைத்து மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுவோம். வேதபாரகர், பிரதான ஆசாரியர் போன்றவர்கள் இயேசுவைக் குற்றப்படுத்தும்படியே வகைதேடினார்கள். சிலுவையின் கடைசிபரியந்தமும் பரியாசஞ்செய்தனர். ''மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம், தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன் மேல் நம்பிக்கையாயிருந்தானே; அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள்'' (மத்.27:42-43). ஆனால் இயேசுவோ, ''..... பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார் ........'' (லூக்.23:34). நம்மால் இப்படிக்கூறமுடியுமா? இவ்வாறெல்லாம் பொறுமையாக, மனத்தாழ்மையுடன் அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருக்க முடியுமா? தேவன் நம்மைக் குறித்து கொண்டுள்ள சித்தத்தினை நிறைவேற்றும்படி அவருடைய பலத்தகைக்குள்

# தேவன் உங்களை உயர்த்துவார்
## God May Exalt You

J.Glory Arjunan

பெண்கள் பகுதி



அன்பு சகோதரிகளே, இப்புத்தாண்டில் தேவன் உங்களை உயர்த்துவார் என வாழ்த்துகிறேன். நிச்சயமாக தேவன் நம்மை உயர்த்துவார். அவருடைய ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போவதில்லை. தேவன் நம்மை உயர்த்தும்படி நாம் என்ன செய்ய வேண்டுமென தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார் என வேதத்தின் உதவி கொண்டு பார்ப்போம்.

**கர்த்தருக்குமுன் தாழ்மைப்படுவோம்:**

ஆம். கர்த்தருக்கு முன் நம்மைத் தாழ்த்துவோம், அவருக்கு முன் பணிந்து குனிந்து முழங்காற்படியிடுவோம். இன்னும் மென்மேலும் உயர்த்தப்பட "நம்முடைய தேவனாகிய கர்த்தரை உயர்த்தி அவர் பாதபடியிலே பணியுங்கள்; அவர் பரிசுத்தமுள்ளவர்"(சங்.99:5). சகோதரியே, இன்று உன்னுடைய கல்வி, உன்னுடைய பட்டம், உன்னுடைய அந்தஸ்து, உன்னுடைய செல்வம், உன்னுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் யாரால் வந்தது? உன்னுடைய ஞானம், உழைப்பு, இவற்றால் வந்தது என எண்ணுகிறாயோ? இல்லை. நிச்சயமாய் இல்லை. கர்த்தருக்கு முன் உன்னைத் தாழ்த்து.

"தம்முடைய சொந்தக்குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பதெப்படி?" (ரோம.8:32) என்ற வசனத்திற்கேற்ப நமக்கு ஜீவன், சுகம், பெலன், செல்வாக்கு, அந்தஸ்து என எல்லாவற்றையும் அருளி, இப்புத்தாண்டினையும் காணும்படி செய்திருக்கிறார். இது அவருடைய பெரிதான கிருபையல்லவா? இப்பேர்ப்பட்ட நம்முடைய கர்த்தருக்கு முன்பாக நம்மைத் தாழ்த்துவோம். நம்முடைய சுயபெலத்தால் ஒன்றையும் சவதரிக்கமுடியாது என நினைவுகூருவோம். கர்த்தர் ஒருவனை ஆசீர்வதித்தாலொழிய ஒருவனும் ஆசீர்வதிக்கப்படான். நமக்குரியதைக் குறித்து மேட்டிமையாயிராமல் கர்த்தருக்கு முன் தாழ்மைப்படுவோம். பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1பேது.5:5). அவர் பாதபடிமுன் பணிவோம் அவரையே உயர்த்துவோம். வரும் நாட்களிலும் அவரால் உயர்த்தப்படுவோம்.

**கீழ்ப்படிந்து தம்மைத்தாமே தாழ்த்துவோம்:**

கர்த்தருக்கு முன் நாமொன்றுமில்லை என அவருக்குமுன் தாழ்மைப்படுவதோடுகூட அவருக்குக் கீழ்ப்படிந்து நம்மை நாமே தாழ்த்துவதும் அவசியமாயிருக்கிறது. ஆம், நம்முடைய ஆண்டவர், தேவனுடைய மடியிலிருந்தவர் தம்மை தாழ்த்தினார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் .......... அடிமையின் ரூபமெடுத்து, மனுஷசாயலானார். சிலுவையின் மரணபரியந்தமும் **கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி.....** எல்லா நாமத்திற்கும்



என்றும் இயேசு கிறிஸ்து என்றும் பேசப்படவில்லை, ஆனால் அவர் உறுதியாக ஒரே நபராக அடையாளப்படுத்தப்படுகிறார். உதாரணமாக, யாத்திராகமம்3:13,14-ல், "கர்த்தருடைய தூதன் மோசேக்கு எரிகின்ற ஒரு முட்செடியில் தரிசனமாகி, சொல்லுகையில், அவர் தேவனாக அடையாளப் படுத்தப்படுகிறார் மேலும் தம்மை **"இருக்கிறேன்"** என அழைக்கிறார். யோவான்8-ல், இயேசு அந்த நாமத்தை தமக்கே பயன்படுத்தினார். யாத்.32:34,மேலும் தொடந்து 33-ம் அதிகாரமும் கர்த்தர் இஸ்ரவேலருக்கு முன்பாக எகிப்திலிருந்து அவர்களுடைய பயணத்தில் என்னுடைய தூதனை அனுப்புவேன் என வாக்களிக்கின்றதைக் காட்டுகிறார். 1கொரி.10:1-4 இஸ்ரவேல ரோடே கூடச் சென்றவர் கன்மலையாகிய இயேசு கிறிஸ்து என அடையாளப்படுத்தபடுகிறது, நியாயா.2:1, "எகிப்திலிருந்து உங்களை புறப்படப்பண்ணினவராகிய" அவர் "கர்த்தருடைய தூதன்" என அடையாளங் காட்டுகிறது. யாத்.14:19, நியாயா.13:6,9, 2சாமு.14:17,20, நியாயா2:1, ஏசாயா63:9, யாத்.2, ஏசாயா63:7-10 போன்ற வசனங்களைப் பாருங்கள்.

பழைய ஏற்பாட்டின் பல பகுதிகள் தேவனைக் குறித்து பேசுகின்றன, ஆனால் புதிய ஏற்பாட்டில் ஆவியின் தூண்டுதலினால் கிறிஸ்துவைக் குறிக்கின்றது, அவைகள்: ஏசா40:3, மத்.3:3, யோவா.1:29, சங்.24:9,10, மற்றும் 1கொரி.2:8,யாக்.2:1, ஏரே.23:5, மேலும் 1கொரி.1:30, ஏசா.8:13,14, மேலும் 1பேது.2:7,8, சங்.110:1, அப்.2:34-36, மல்.3:1, லூக்.1:76, யோவா.1:30, யோவேல்2:32, 1கொரி.1:2, சங்.45:1,6,7, எபி.1:8, சங்.102:25-27, எபி.1:10, ஏசா.52:4, மற்றும் 1பேது.1:10 பேன்றவைகள் ஆகும்.

மத்தேயு1:18-25-ல் "இயேசு கிறிஸ்துவின் ஜெநநத்தின் விவரமானது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது. அவன் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்தமனதில்லாமல், இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன்: இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம். யோசேப்பு நித்திரைதெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக்கொண்டு; அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான்". இச்சம்பவத்தை நீங்கள் லூக்1 மற்றும் 2-ல் காணலாம்.

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்தும் அவருடைய ராஜ்யத்தைக் குறித்தும் பல தீர்க்கதரிசனங்கள் உள்ளன. தானியேல், "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு

ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்''(தானி2:44) என்றான். மத்தேயு3:1-3க்குச் செல்கையில், ''அந்நாட்களில் யோவான்ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து, மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். **கர்த்தருக்கு வழியை ஆயத்தப் படுத்துங்கள்; அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று**, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே'' என்கிறான். கிறிஸ்து மத்.16:17,18-ல் அவர் தம்முடைய சபையை அல்லது ராஜ்யத்தைக் கட்டப்போவதாகச் சொன்னார் மேலும் கொலோ.1:13,14-ல் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம் என்றான். தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டதும், என்றென்றும் நிலைத்திருக்கும்படி வரப்போகின்ற ராஜ்யமாகிய சபையைக் குறித்து இங்கு பவுல் பேசுகின்றான்.

மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவானில் நாம் இயேசுவின் வாழ்க்கையைப் பற்றி வாசிக்கையில், அவர் சோதிக்கப்பட்டார் ஆனால் அவர் ஒருபோதும் பாவஞ்செய்யவில்லை என அறிவுறுத்தப்படுகிறோம். அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என நிரூபிக்கும்படி பல அற்புதங்களை நடப்பித்தார். அவர் வியாதியஸ்தரை குணமாக்கினார், பிசாசுகளை துரத்தினார், மரித்தோரை உயிர்ப்பித்தார். நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்து, ''ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்''(யோவா.3:2) என யோவான் கூறுகிறான்.

இயேசு ஒரு குற்றமற்ற ஜீவியம் ஜீவித்தபோதும் மனிதனை இரட்சிக்க வந்த போதும், அவருக்குப் பகைவர்கள் இருக்கத்தான் செய்தார்கள் அவரை விசுவாசியாதவர்களும் அவரிடம் பொறாமை கொண்டவர்களும் அங்கிருந்தார்கள். யூத மதத்தலைவர்களும் கூட அவரைப் புறக்கணித்தார்கள், ஏனென்றால் அவர் 'ராஜா' வம்சத்தை சேராதவர் என தங்கள் மனதில் எண்ணி அவரைப் பின்பற்றுகிறவர்களைக் குறித்து அவர்கள் பொறாமை கொண்டார்கள். இவையெல்லாமே மத்தேயு26-28-ல் எழுதப்பட்டுள்ளபடி அவருடைய சிலுவை மரணத்திற்கு அவரை இட்டுச்சென்றது. ஆனால் அவர் சிலுவையின் மேல் மரித்து அடக்கம் செய்யப்பட்டபோதிலும், அவர் வாக்களித்திருந்தபடியே கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். இது மத்தேயு26-28-லும் மேலும் மற்ற பல வேதாகமப் பகுதிகளிலும் எழுதப்பட்டுள்ளது. அதன்பிறகு சில நாட்கள் கழித்து அவர் ராஜாதிராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் அரசாளும்படி பிதாவினிடத்திற்கு பரலோகத்திற்கு ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார் (அப்.1:7-11).

ஆனால் இதுவே இந்த சங்கதியின் முடிவல்ல. இயேசு உலகத்தின் பாவங்களுக்காக மரித்திருக்கையில், இன்றும் கூட அவரிடத்தில் விசுவாசம் வைத்து



பற்றிய சம்பவங்களுக்கான குறிப்புகளை கொண்டிருந்தாலும், பின் நாட்களில் இந்து மத வேதங்களும் புனித புத்தகங்களும் இணைக்கப்பட்டபடியால் எண்ணிக்கைக்கு அடங்கா தெய்வங்களைப் பற்றியும், பூமியின் "சரித்திரத்தை" பற்றியும் அநேக புராணக்கதைகள் தோன்றின. அப்படிப்பட்ட கதைகளில் ஒன்று "அமிர்தம்" என்னும் ஒரு திரவத்தை பெறத்தக்கதாக அதை குடிப்பவர்கள் உயிரோடு இருப்பதற்காக அதை பெறும்படியாக எதிர்பார்ப்பு இருந்தது. அவர்கள் அழியாத தன்மையை பெற்றுக் கொள்ளும்படியான எதிர்பார்ப்பும் இருந்தது. (ஜே.எம். மேக்ஃபை எழுதிய இந்தியாவின் புராணங்களும் பழங்கதைகளும்) என்ற புத்தகத்திலிருந்து, பொற்காலத்தில் உலகம் இளமையாயிருந்த பொழுது தேவர்களோ அல்லது அவர்களுடைய ஒன்றுவிட்ட சகோதரர்களோ, பேய்களோ முடிவில்லாதவர்களா யிருக்கவில்லை. மற்ற சிருஷ்டிகளைப்போலவே அவர்களும் முதிர்வயது மற்றும் மரணத்துக்குட்பட்டவர்களாயிருந்தார்கள். அவர்களுடைய தன்மைகளில் இது ஒரு குறையாக இருந்தது. அவைகள் பகுதிகளாக பிரித்து அகற்றப்பட வேண்டியதாயிருந்தது. மேரு பர்வதத்தின் சரிவுகளில் விருப்பமுள்ள குழுக்களின் ஒரு மாநாடு சரியாக நடத்தப்பட்டது....

"கிரியைகளெல்லாம் தொடங்கப்படுவதற்கு முன்பு ஒரு கடைந்த துருவம் அத்தியாவசியமானதாக இருந்தது. அந்த நோக்கத்திற்காக தேவர்களும் பேய்களும் மந்தாரா என்றழைக்கப்பட்ட ஒரு பர்வதத்தை பயன்படுத்த தீர்மானம் செய்தார்கள். அந்த பர்வதம் 77,000 மைல் உயரமுள்ளதாகவும், அதற்கு சமமான தூரத்திற்கு அதன் வேர்கள் ஆழமாக சென்ற நிலையிலும் இருந்தது. அவர்கள் அதை வேரோடு அகற்ற முயற்சி செய்த பொழுது, அவர்கள் தங்களுடைய ஒருங்கிணைந்த முயற்சி பலனளிக்க வில்லை என்பதை கண்டார்கள்... எவ்வாறு இருப்பினும் அவர்கள் கவலைப்படவேண்டாம் என்று விஷ்ணு அவர்களுக்கு சொன்னார். ஆனந்தா என்ற பெரிய சர்ப்பம் அவர்களுக்காக மலையை அகற்றும் ... வாசுகி என்ற மற்றொரு சர்ப்பமும் அந்த பணியை செயல்படுத்த ஒத்துக் கொண்டது (புதற்றத்தை ஏற்படுத்தும் ஒரு கயிறாக). ஆயிரம் வருஷங்களுக்கு மேலாக தேவர்களும் பேய்களும் தங்களுடைய கடுமையான பணியில் ஈடுபட்டார்கள்....

".... அவர்கள் முன்னும் பின்னுமாக அவனை (வாசுகி) இழுத்தபடியால்... அவன் திரவ நஞ்சை நீரோடைகளாக தன்னுடைய கோபம் நிறைந்த பற்களிலிருந்து முன்பாக ஊற்றினான் அந்த நஞ்சு நிலப்பகுதியை துடைத்துப் போட்டது. இறுதியாக முழு பூமியின் மேலாகவும் பெருமளவில் அழிவுக்கு நேராக தேவர்களையும், பேய்களையும் பிராணிகளையும், மனுஷரையும் கொண்டு சென்றது. தங்களுடைய துக்கத்தில் அழிக்கும் கடவுளாகிய சிவனை நோக்கி வணங்கினார்கள்..... அவன் விஷத்தை பருகியவனாக இருந்தான். இந்த வல்லமையான விஷத்தை குடித்த செய்கை சிறு தீங்கை கூட அவனுக்கு ஏற்படுத்த வில்லை. ஆனால் இது எப்பொழுதும் கவனிக்க கூடிய ஒன்றாக இருந்தது. அது அவனுடைய தொண்டையில் ஒரு நீல நிற அடையாளத்தை ஏற்படுத்தியது. இந்நாள் வரைக்கும் அவனை வழிபடுகிறவர்கள் அவனை நீல கண்ட தேவனென்று அழைக்கிறார்கள்...."

தேவனிடத்தில் நம்பிக்கையற்றவர்களுடைய படைப்பாகிய இதிகாசங்களுக்கும், வேதாகமத்தில் உள்ள குறிப்புகளுக்கும் இடையேயுள்ள முரண்பாடு என்னவென்றால் வேதாகமத்தில் பெரிதான அறிவு பூர்மான சாட்சிகள் இருந்தது அவைகளுக்கான உரியமையாளர் தெய்வீகமானவர் என்பதே!

பூமிக்குரிய உலகத்தில் ஏற்பட்டதும், இச் செய்தியின் முக்கிய பாகங்களாக இருக்கின்றன. இத்தகைய வேதாகம தகவல் இல்லாவிட்டால் ஆரவாரமான ஜலங்கள் எழும்பி பூமியை மூடிவிட்ட ஜலப்பிரளயத்தின் போது மனுஷர் பிராணிகள் மற்றும் தாவரவகைகளாகிய ஜீவன்கள் இவைகள் வேகமாக அடக்கம் செய்யப்பட்டதால் உருவாகிய பெரிதான அகழ்வு படிமங்களை குறித்த எந்த விளக்கமும் நமக்கு கிடைத்திருக்காது. சமுத்திரத்திலிருந்த ஜீவராசிகளின் அகழ்வு படிவங்கள் (Fossils) எப்படி மலைச் சிகரங்களை அடைந்தன என்று நாம் அறிந்திருக்க மாட்டோம். ஜலம் அடுக்கடுக்காக எழும்பி பூமியின் மேற்பரப்பை எவ்வாறு மூடிப் போட்டது என்பதற்கான ஒரு விளக்கமும் இருந்திருக்காது.

**தேசங்களின் பட்டியல்**

இந்த ஒவ்வொரு ஜனங்களின் வம்ச வரலாறும் ஆதியாகம் 10,11 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுடைய சந்ததியாருடனே எழுபது தேசங்களின் பெயர்களும் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாகமத்தின் சரியான தன்மையை சந்தேகிக்கிறவர்கள் "இந்த தேசங்களின் பட்டியல் ஆதியாகமத்தை எழுதியவரின் கட்டுக் கதையே அல்லமல் வேறல்ல" என்று கூறியிருக்கிறார்கள். மிகவும் பழமையான இந்த தேசங்களை குறித்த சில குறிப்புகள் அறியப்பட்டிருக்கின்றன. ஆனாலும் தொல் பொருள் ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய தேடும் பணியை தொடர்ந்தபடியால், உண்மையிலேயே இருந்த இந்த தேசங்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய நிரூபணத்தை வேதாகம குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறபடியே சரியாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள் (ஜலப்பிரளயத்துக்கு பின்பு, பில் கூப்பர்)

மீண்டும் வேதாகமத்தின் சித்தரிப்பை உறுதி செய்யும் வகையில் ஜலப்பிரளயத்தை தொடர்ந்துவரும் மிக தொன்மையான நாகரீகங்கள் முன்னேற்றம் அடைந்த கட்டுமான வகைகள், திறமை வாய்ந்த வேலைப்பாடுகள் - 'குகை மனுஷர்களின்' வேலை அல்ல மீண்டும் பரிணாம கொள்கையாளர்களின் உபதேசத்திற்கு எதிரிடையாக இருக்கின்றன. பட்டணங்கள் அடிக்கடி திட்டமிடப்பட்ட முறைமைகளின் வீடுகளுக்கான தண்ணீர் மற்றும் கழிவு நீர் அகற்றும் வசதிகளுடன் இருந்தன. சுரங்கத்திலிருந்து வெட்டி எடுக்கப்பட்ட கற்களை பயன்படுத்தி கட்டப்பட்ட மாபெரும் நினைவுச் சின்னங்கள் இருந்தன, அவை இன்றைக்குள்ள பொறியாளர்களுக்கும் சவால் விடக் கூடிய வகையில் அமைந்துள்ளன.

வேதாகம குறிப்பின் வரலாற்று சரி நிலைக்காகவும் அது நமக்கு சொல்லுகிறபடி நாம் யார் என்ற செய்திக்காகவும் நாம் இங்கு உயிர் வாழத்தக்கதாக எப்படி வந்தோம், இன்றைக்கு உலகத்தில் நம்முடைய நோக்கம் என்ன என்ற தகவலை, நமக்கு சொல்கிறபடியால் நாம் மிகவும் கடன்பட்டவர்களாயிருக்கிறோம். இந்த நம்பிக்கையான மிகவும் ஆதாரம் உள்ள தகவல் நமக்கு இல்லாவிடில், நாம் ஒரு அறியாமை கடலில் இடறி விழுந்திருப்போம். வேதாகமத்தில் புராண அடிப்படை கொள்கைகள் இல்லாதிருப்பது மற்ற மார்க்க புத்தகங்களிலிருந்து நம்மை நோக்கி வந்திருக்கிற முரண்பாடுகளுக்கு இது மோதலான கருத்தாயிருக்கிறது.

ஏற்கெனவே குறிப்பிட்டபடி மிகவும் பழமையான இந்து வேதங்களின் பாடல்கள் வேதாகம குறிப்புக்கு ஒத்த வகையில் தேவன் மற்றும் சிருஷ்டிப்பை



அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களை இரட்சிக்கிறார் (யோவா.3:16,17: மாற்16:16, அப்.2:38,47). அவர் விசுவாசமுள்ளவர்களை, அவரோடுகூட என்றென்றும் அவர்கள் வாழப்போகின்ற பரலோகத்திற்கு எடுத்துச்செல்ல மறுபடியும் வரப்போவதாக வாக்களித்திருக்கிறார் (வெளி.222:14; வெளி.2:10).

நீங்கள் இவ்வுலகத்திலும் வரப்போகிற உலகத்திலும் இரட்சிக்கப் பட்டிருக்கும்படி கிறிஸ்துவைப் பற்றி வாசித்துக் கற்றுக்கொள்ளும்படிக்கும், அவரிடத்தில் விசுவாசம் கொள்ளும்படிக்கும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்படியும்படிக்கும் நீங்கள் உற்சாகப்படுத்தப்படுகிறீர்கள்.


## வாசகரின் கடிதம்

அன்புள்ள பிரதர் B.அர்ஜுனன் அவர்களுக்கு வேதஅறிவுப்போட்டிக்கு நீங்கள் மாதா மாதம் சரியான விடையெழுதியோர்க்கு ஏதாவது ஒரு பரிசு அனுப்பி உங்கள் வாசகர்களை உற்சாகப்படுத்தலாம்.

எல்லா பத்திரிக்கைகளிலும் பரிசு கொடுக்கிறார்கள். எவ்வளவோ ஊழியத்தின் மத்தியிலும் இதை நீங்கள் உங்கள் குழுவோடு சேர்ந்து முடிவு எடுத்தால் நன்றாயிருக்கும். எங்களை உற்சாகப்படுத்தினதுபோல் இருக்கும் அதற்காகவே எழுதுகிறேன்.

இப்படிக்கு,
Mrs.ஜெபசீலி ஜெயக்கொடி
திருச்சி

"ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" லூக்கா 10:20



## ஆசிரியரின் கடிதம்

*'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழைப் பெற்று சத்தியங்களை நீங்கள் அறிந்து வருவது குறித்து சந்தோஷம் அடைகிறோம். 100 பேருக்கு நமது இதழை அறிமுகம் செய்து அவர்களுடைய முகவரிகளை சேகரித்து அனுப்பு கிறவர்களுக்கு முழு வேதாகமம் பரிசாக கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை தொடர்ந்து முதலாவதாக அந்த வேலையை செய்து முழு வேதாகமத்தை பரிசாக பெறுபவர் அன்பின் சகோதரர் M. துரைசாமி அவர்கள் திண்டுக்கல் மாவட்டம்.*

*நீங்களும் இவ்விதமான ஒரு ஊழியத்தை கர்த்தருக்காக செய்து சத்தியம் பரவ உதவிடலாமே!*

*ஆசிரியர்*

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் சுவிசேஷம் அறிவித்து வருகிறோம்.
நீங்கள் ஒரு விசுவாசியாக இருக்கலாம் அல்லது சபை ஊழியராக இருக்கலாம்
உங்களுடைய மாவட்டத்திலும் சுவிசேஷம் அறிவிக்க வருகிறோம்.
எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள் –94435 58041
எங்களது இரண்டாவது சுழற்சியில் இதுவரை சந்திக்கப்பட்ட மாவட்டங்கள்
1.தூத்துக்குடி 2.சென்னை 3.ஈரோடு 4.கரூர்



# கேள்வியும் வசன ரீதியான பதிலும்


1. **எது சத்தியம்?** - தேவனுடைய வசனமே சத்தியம் - (யோவான்17:17)
2. **ராஜரீக பிரமாணம் எது?** - உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக - (யாக்கோபு2:8)
3. **தேவன் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் எது?** - நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் - (1யோவான்2:25)
4. **கிறிஸ்துவின் பிரமாணத்தை எப்படி நிறைவேற்ற முடியும்?** - ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து - (கலாத்தியர்6:2)
5. **அன்பை எப்படி நாம் அறிந்துகொண்டோம்?** - அவர் தம்முடைய ஜீவனை நமக்காக கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்துகொண்டோம் - (1யோவான்3:16)
6. **எது அன்பு?** - நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு - (2யோவான்6)
7. **பிதாவையும் குமாரனையும் உடையவன் யார்?** - கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் - (2யோவான்9)
8. **எது நித்திய ஜீவன்?** - ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன் - (யோவான் 17:3)
9. **முதல்முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்கு என்னபேர்வழங்கிற்று?** - கிறிஸ்தவர்கள் - (அப்போஸ்தலர்11:26)
10. **நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் யாருக்கே சொல்லுகிறது?** - நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம் - (ரோமர்3:19)

### *நீங்கள் இவ்விதழின் வாசகரா? அப்படியானால் உங்களுடைய பங்கு என்ன?*


- மற்றவர்களுக்கு இவ்விதழை அறிமுகம் செய்யலாம்.
- வாசகர்களை தெரிந்து கொண்டு அவர்களுக்கு சந்தா செலுத்தலாம்.
- உங்கள் பகுதியில் சபையாக கூடி இச்செய்திகளை வாசித்துக்காட்டலாம்.
- இவ்விதழின் ஆசிரியரை அழைத்து சுவிசேஷ கூட்டங்கள் நடத்தலாம்.
- இவ்விதழின் வளர்ச்சிக்காக ஜெபிக்கலாம்.
- உங்களுடைய கருத்துக்களை அவ்வப்போது தெரியப்படுத்தலாம்.
- மாதம் ஒரு முறை அலுவலகத்திற்கு வந்து உதவிடலாம்.



## *எது தேவனுடைய புத்தகம்?*
## Which Is God`s Book? *-Betty*



பெண்கள் பகுதி




நாம் கண்டிருக்கிற மார்க்கங்களின் உருவமைப்புகளின் சுருக்கமான காட்சிகள் முற்றுப் பெறாதவைகளாக மாத்திரமே இருந்த போதிலும், அவைகள் நன்றாக பொருந்தியிருக்கிற விதமானது அவைகளுக்கிடையேயுள்ள நம்பிக்கைகள் மற்றும் வழக்கங்கள் குறிப்பிடத்தக்கவகையில் ஒத்த தன்மையுடையவைகளாக இருக்கின்றன. வேதாகமத்தில் நமக்காக அதிக முழுமையான பதிவு நமக்காக பாதுகாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிப்படையான இதிகாச பாத்திரங்களும் கதைகளும், மற்ற வகை "புனித" நூல்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தில் மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட காலம் தொடங்கி அவனுடைய வரலாற்றை குறித்த உண்மையான விளக்கத்தை நிரூபிக்கப்பட்ட சுருக்கமான, ஆனால் தெளிவான உண்மை சம்பவத்தை நாம் வாசிக்க முடியும்.

**வரலாற்றுக்கு தொடர்புடைய வேதாகம குறிப்பின் மதிப்பு.**

இது அதற்குள்ளேயே ஒரு பொக்கிஷமாக இருக்கிறது. வேதாகம குறிப்பானது மனித இனத்துக்கு கொடுக்கப்பட்டிருக்காவிடில் இந்த அண்ட சராசரம், நமது உலகம் அல்லது மனித இனம் உருவானது என்பதை நாம் அறிந்திருக்க மாட்டோம். பாவம் எவ்வாறு உருவானது என்பதையும் அதன் விளைவாக நன்மைக்கும், தீமைக்கும் இடையே உருவான போராட்டத்தையும் அறிந்திருக்க மாட்டோம். பரிணாம கொள்கையாளர்களின் கருத்துக்கு எதிராக ஆதிகால மனுஷர்கள் மிருகங்களைக் காட்டிலும் சற்று கூடுதலாக மேம்பட்டவர்களாக இருந்தார்கள். சகல ஜனங்களும் நிர்வாணமாகவும், அலைந்து திரிகிறவர்களாகவும் குகைகளிலும் மற்ற தற்காலிகமான உறைவிடங்களிலும் வாழ்ந்து வந்தார்கள். வேதாகமம் சொல்கிறது, ஆதாமும் ஏவாளும் அவர்களுடைய ஆரம்ப கால சந்ததியாரும் முழுமையான மனுஷர்களாய் இருந்தது மாத்திரமல்ல திறமையானவர்களாகவும், புத்திக் கூர்மையுள்ளவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் பட்டணங்களை கட்டினார்கள், விவசாயம் செய்கிறவர்களாகவும், திரளான மந்தைகளையுடையவர்களாகவும் இருந்தார்கள். இவர்கள் இசைக்கருவிகளை உருவாக்கினார்கள், பித்தளை மற்றும் இரும்பு வேலை செய்கிற தொழிலாளிகளாகவும் இருந்தார்கள். தொழிலாளர்களுக்கு ஆசாரியராகவும் இருந்தார்கள் (ஆதி.4:16-22). உண்மையாகவே ஆதியாகமத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கிற காட்சியானது ஆரம்ப கால நூற்றாண்டுகளின் போது நடந்த எல்லா சம்பங்களினை அடையாளப்படுத்தும் ஒரு மெய்யான வரை குறிப்பாக மாத்திரமே இருக்கிறது. ஏனென்றால் வேதாகமம் எழுதப்பட்டதற்கான நோக்கம் ஒரு முழுமையான வரலாற்றை அளிப்பதற்காக அல்ல, ஆனால் மனித சமுதாயத்துக்கான தேவ செய்தி கட்டப்படும்படியாக அதற்கான அஸ்திபாரத்தை போடும்படியாக எழுதப்பட்டது.

இந்த குறிப்பு தொடருகிறபடியாக பாவம் மிதமிஞ்சி பெருகி அதன்விளைவாக உலகளாவிய ஜலப்பிரளயம் ஏற்பட்டு அதன் பாதிப்பு நம்முடைய